## நம்மாழ்வார் திருவாய் மலர்ந்தருளிய
# திருவாய்மொழி 3-3 - ஒழிவில் காலம்[1]
## (திருவேங்கடமுடையான் திருவடிகளில் காலமெல்லாம் வழுவிலா அடிமை செய்யப் பாரித்தல்)

2919 * ஒழிவில் காலம் எல்லாம் * உடனாய் மன்னி *
வழுவிலா * அடிமை செய்ய வேண்டும் நாம் **
தெழிகுரல் அருவித் * திருவேங்கடத்து *
எழில் கொள் சோதி * எந்தை தந்தை தந்தைக்கே 1

2920 எந்தை தந்தை தந்தை * தந்தை தந்தைக்கும்
முந்தை * வானவர் * வானவர் கோனொடும் **
சிந்து பூ மகிழும் * திருவேங்கடத்து *
அந்தமில் புகழ்க் * கார் எழில் அண்ணலே 2

2921 அண்ணல் மாயன் * அணிகொள் செந்தாமரைக்
கண்ணன் * செங்கனி வாய்க் * கருமாணிக்கம் **
தெண்ணிறைச்[2] சுனை நீர்த் * திருவேங்கடத்து *
எண்ணில் தொல் புகழ் * வானவர் ஈசனே 3

2922 ஈசன் வானவர்க்கு என்பன் * என்றால் * அது
தேசமோ * திருவேங்கடத்தானுக்கு **
நீசனேன் * நிறை ஒன்றுமிலேன் * என் கண்
பாசம் வைத்த * பரஞ்சுடர்ச் சோதிக்கே 4

2923 சோதியாகி * எல்லா உலகும் தொழும் *
ஆதி மூர்த்தி என்றால் * அளவாகுமோ? **
வேதியர் * முழு வேதத்தமுதத்தை *
தீதில் சீர்த் * திருவேங்கடத்தானையே 5

2924 வேங்கடங்கள் * மெய்ம்மேல் வினை முற்றவும் *
தாங்கள் தங்கட்கு * நல்லனவே செய்வார் **
வேங்கடத்துறைவார்க்கு * நம என்ன
லாம் கடமை * அது சுமந்தார்கட்கே 6

2925 சுமந்து மாமலர் * நீர் சுடர் தூபம் கொண்டு *
அமர்ந்து வானவர் * வானவர் கோனொடும் **
நமன்றெழும் * திருவேங்கடம் நங்கட்கு *
சமன் கொள் வீடு தரும் * தடங் குன்றமே 7

---
[1] இது கோவில் திருவாய்மொழி
[2] தெண்ணிறச்

2926 * குன்றம் ஏந்திக் * குளிர் மழை காத்தவன் *
அன்று ஞாலம் * அளந்த பிரான் ** பரன்
சென்று சேர் * திருவேங்கட மாமலை *
ஒன்றுமே தொழ * நம் வினை ஓயுமே 8

2927 ஓயும் மூப்புப் * பிறப்பு இறப்புப் பிணி *
வீயுமாறு செய்வான் * திருவேங்கடத்து
ஆயன் ** நாள் மலராம் * அடித் தாமரை *
வாயுள்ளும் மனத்துள்ளும் * வைப்பார்கட்கே 9

2928 வைத்த நாள் வரை * எல்லை குறுகிச் சென்று *
எய்த்திளைப்பதன் * முன்னம் அடைமினோ **
பைத்த பாம்பணையான் * திருவேங்கடம் *
மொய்த்த சோலை * மொய்பூந்தடம் தாழ்வரே 10

2929 * தாள் பரப்பி * மண் தாவிய ஈசனை *
நீள் பொழில் குருகூர்ச் * சடகோபன் சொல் **
கேழில் ஆயிரத்து * இப்பத்தும் வல்லவர் *
வாழ்வர் வாழ்வெய்தி * ஞாலம் புகழவே 11

**அடிவரவு:** ஒழிவில் எந்தை அண்ணல் ஈசன் சோதி வேங்கடம் சுமந்து
குன்றம் ஓயும் வைத்த தாள் புகழ்